# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின்
# பாராளுமன்றம்

---

## 2000 ஆம் ஆண்டின் 3 ஆம் இலக்க, ஶ்ரீ கங்கா திலக மகா விகாரஸ்த சாசனாரக்ஷக சமிதிய (கூட்டிணைத்தல்) சட்டம்

---

*(2000, சனவரி மாதம் 17 ஆம் திகதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது)*

அரசினர் ஆணைப்படி அச்சிடப்பட்டது

---

2000, சனவரி மாதம் 21 ஆந் தேதிய **இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானப் பத்திரிகையின்** II ஆம் பகுதிக்குக் குறைநிரப்பியாக வெளியிடப்பட்டது.

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.

கொழும்பு 1, அரசாங்க வெளியீட்டலுவலகத்திற் பெற்றுக்கொள்ளலாம்.

**விலை: ரூபா 7.75** **தபாற் செலவு: ரூபா 3.50**

# 2000 ஆம் ஆண்டின் 3 ஆம் இலக்க, ஸ்ரீ கங்காதிலக மகா விகாரஸ்த சாசனாரக்ஷக சமிதிய (கூட்டிணைத்தல்) சட்டம்

[2000 ஆம் ஆண்டு சனவரி மாதம் 17 ஆந் திகதி அத்தாட்சிப் படுத்தப்பட்டது.]

ச. வ.– ஓ. 91/93

## ஸ்ரீ கங்காதிலக மகா விகாரஸ்த சாசனாரக்ஷக சமிதியவைக் கூட்டிணைப்பதற்கானதொரு சட்டம்

முன்னுரை.

"ஸ்ரீ கங்காதிலக மகா விகாரஸ்த சாசனாரக்ஷக சமிதிய" என்றழைக்கப்படுவதும், அறியப்படுவதுமான கழகமொன்று அதன் உறுப்பினர்களால் இணங்கிக்கொள்ளப்பட்ட விதிகளுக் கிணங்கச் சொல்லப்பட்ட கழகத்துடன் தொடர்புபட்ட எல்லாக் குறிக்கோள்களையும், அத்துடன் கருமங்களையும் பயனுற நிறைவேற்றிக் கொண்டுநடாத்தும் நோக்கத்துக்கென மல்பான, கென்கல்ல என்னுமிடத்தில் இதற்கு முன்னர் தாபிக்கப்பட் டிருந்ததாதலாலும் :

அத்துடன் சொல்லப்பட்ட கழகமானது எந்தப் பல்வேறு குறிக்கோள்களுக்காகவும், கருமங்களுக்காகவும் உருவாக்கப் பட்டதோ அந்தப் பல்வேறு குறிக்கோள்களையும், கருமங் களையும் இதுவரை வெற்றிகரமாக நிறைவேற்றியும் கொண்டு நடாத்தியும் வந்துள்ளதாதலாலும், அது கூட்டிணைக்கப்பட விண்ணப்பித்துள்ளதாதலாலும், அவ்விண்ணப்பத்தை அனுமதித் தல் பொதுமக்கள் நன்மைக்கானதாதலாலும் :

ஆகவே இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக :—

சுருக்கப் பெயர்.

**1.** இச்சட்டம் 2000 ஆம் ஆண்டின் 3 ஆம் இலக்க, ஸ்ரீ கங்காதிலக மகா விகாரஸ்த சாசனாரக்ஷக சமிதிய (கூட்டிணைத்தல்) சட்டம் என எடுத்துக்காட்டப்படலாம்.

ஸ்ரீ கங்காதிலக மகா விகாரஸ்த சாசனாரக்ஷக சமிதியவைக் கூட்டிணைத்தல்.

**2.** இச்சட்டம் தொடங்கும் தேதியிலிருந்தும், அதன் பின்னரும் (இதனகத்துப் பின்னர் "சமிதிய" எனக் குறிப்பீடு செய்யப்படும்) ஸ்ரீ கங்காதிலக மகா விகாரஸ்த சாசனாரக்ஷக சமிதியவின் தற்போதைய உறுப்பினராகவுள்ள அல்லது இத்தால் அமைக்கப் படும் கூட்டுத்தாபனத்தின் உறுப்பினர்களாக இதன்மேல் சேர்த்துக்கொள்ளப்படும் அத்தகையோரான அத்தனை ஆட்களும் (இதனகத்துப்பின்னர் "கூட்டுத்தாபனம்" எனக் குறிப்பீடுசெய்யப்படும்) "ஸ்ரீ கங்காதிலக மகா விகாரஸ்த சாசனாரக்ஷக சமிதிய" என்னும் பெயர் மகுடத்தின்கீழ் இடையறா வழியுரிமை கொண்ட கூட்டிணைக்கப்பட்ட ஒரு குழுவாயிருத்தல் வேண்டும். அத்துடன் அப்பெயர் கொண்டு எல்லா நீதிமன்றங்களிலும் அது வழக்குத்தொடுக்கலாம் என்பதோடு, அதற்கு எதிராக வழக்குத்தொடுக்கவும்படலாம். பொது இலச்சினையொன்றை வைத்திருக்கவும், பயன்படுத்தவும் அது விரும்பியாங்கு அந்த இலச்சினையை மாற்றவும், முழுத்தத்துவமும், அதிகாரமும் பெற்றதாயிருத்தலும் வேண்டும்.

2-ஃ- 045724 - 1,000 (97/09)

கூட்டுத்தாபனத்தின் பொதுக் குறிக்கோள்கள்.

3. கூட்டுத்தாபனம் அமைக்கப்படுவதற்கான பொதுக் குறிக்கோள்கள் பின்வருவனவாயிருக்க வேண்டுமென இத்தால் வெளிப்படுத்தப்படுகின்றது :—

(அ) ஸ்ரீ கங்காதிலக மகா விஹாரைக்குத் தேவைப்படும் கட்டடங்களை நிர்மாணித்து அத்துடன் பேணுதல் ;

(ஆ) பௌத்த உபவாசர்களின் கல்வியை மேம்படுத்தல் ;

(இ) ஸ்ரீ கங்காதிலக மகா விஹாரையில் வதியும் பிக்குமாருக்குக் கல்வி வசதிகளுக்கு ஏற்பாடு செய்தலும் ; அவர்களது அன்றாடத் தேவைகளைச் சமாளிப்பதற்கு உதவி செய்தலும் ;

(ஈ) ஸ்ரீ கங்காதிலக மகா விஹாரை அமைந்துள்ள கிராமங்களிலும் அதனை அடுத்துள்ள அத்துடன் சூழவுள்ள இடங்களில் புராதன கலை வடிவங்கள் உட்படக் கலாசாரச் செயற்பாடுகளை ஊக்குவித்தல் ;

(உ) ஓர் ஆரம்பப் பாடசாலை, ஒரு நூல்நிலையம் என்பவற்றைத் தாபித்தலும், சாதனமளித்தலும் அத்துடன் பேணுதலும் ;

(ஊ) கீழைத்தேச மொழிகளுக்காகப் பிரிவொன்றைத் தாபித்தலும் அத்துடன் பேணுதலும் ;

(எ) ஆங்கிலம், பிரென்சு போன்ற சர்வதேச மொழிகளுக்காகப் பிரிவொன்றைத் தாபித்தலும் அத்துடன் பேணுதலும் ;

(ஏ) சர்வதேச ரீதியில் தர்மத்தைப் பரப்புவதில் ஈடுபடுதல் ;

(ஐ) பௌத்த தத்துவத்தையும் வாழ்க்கைமுறையையும் பேணிப்பாதுகாத்தலும் பரப்புதலும் ;

(ஒ) இலங்கையிலும் வெளிநாட்டிலும் உள்ள ஏனைய பௌத்த அமைப்புகளுடன் நட்புறவை ஏற்படுத்திக் கொள்ளல் ;

(ஓ) இலங்கையின் இளையோருக்கு தொழில்சார் கல்விப் பாடநெறிகளை நடாத்துதல் ;

(ஔ) மாணவர்களுக்கு சிறுகைத்தொழில்களில் பயிற்சியளித்தலும் அத்துடன் பிரயோசனமுள்ள குடிமக்களாக நிலைபெறுவதற்கு அவர்களுக்குக் காசாகவோ வேறுவகையாகவோ உதவியளித்தலும் ;

(க) பிரிவேன பாடசாலைகளையும் வேறு கல்வி நிறுவனங்களையும் நிறுவி கொண்டுநடாத்துவதன் மூலமும் புலமைப்பரிசில்களை வழங்குவதன்மூலமும் கல்வியை ஊக்குவித்தலும் அத்துடன் மேம்படச் செய்தலும் ;

(ங) வறியோர், நிர்க்கதியானோர் அத்துடன் நோயாளர்களுக்கு வைத்திய நிவாரணம், உணவு, உடை அத்துடன் உறைவிடங்களை வழங்குதல் ;

(ச) அநாதை இல்லங்களையும், வயோதிபர் இல்லங்களையும், நிறுவி கொண்டு நடாத்துதலும், சமூக நலன்புரி நிலையங்களை நிறுவுதலும் ;

(ஞ) செவிடர், ஊமை, குருடர், மற்றும் அங்கவீனர்களுக்கான நலன்புரி வசதிகளை ஏற்பாடு செய்தலும், பராமரிப்பு இல்லங்களை அமைத்தலும் ;

(ட) கூட்டுத்தாபனத்தின் குறிக்கோள்களை எய்துவதில் ஈடுபட்டுள்ள தொண்டர் சேவையாட்களுக்கும் ஏனையோருக்கும் காசாக அல்லது புலமைப்பரிசில்கள் மூலம் அல்லது வேறுவகையாக உதவியளித்தல் ;

(ண) நூலகங்களை நிறுவிக் கொண்டுநடாத்துதல், புத்தகங்கள், சஞ்சிகைகள், நினைவுமலர்கள் மற்றும் பருவவெளியீடுகள் முதலியவற்றுக்கு கட்டுப்பணமளித்தல் அத்துடன் அவைகளை வழங்குதல் மற்றும் கூட்டுத்தாபனத்தின் குறிக்கோள்களை நிறைவேற்றுவதற்கு உகந்தனவாகக் கருதப்படக்கூடிய வேறு சேவைகளைச் செய்தல் ;

(த) கூட்டுத்தாபனத்தின் குறிக்கோள்களை முன்னெடுத்துச் செல்வதற்கான கண்காட்சிகள், சொற்பொழிவுகள், மாநாடுகள், தத்துவக் கருத்தரங்குகள், வேலைக்களங்கள், வகுப்புகள், விவாதங்கள், சம்மேளனங்கள், சுற்றுலாக்கள், உல்லாசப் பயணங்கள் அல்லது வேறேதேனும் நடவடிக்கைகளை ஊக்குவித்தல், முறைப்படுத்தல், ஏற்பாடு செய்தல் அத்துடன் நடாத்துதல் ;

(ந) கூட்டுத்தாபனத்தின் குறிக்கோள்களையொத்த குறிக்கோள்களைக் கொண்ட வேறு ஏதேனும் மன்றங்கள், சங்கங்கள் அல்லது அமைப்புகளுடன் ஒத்துழைத்தலும் கூட்டிணைதலும் ;

(ப) ஆயுள்வேத அத்துடன் தேசிய வைத்திய ஞானத்தைக் கற்றறியும் வேலைத்திட்டங்கள் அத்துடன் அதற்கான உயர்கல்வி டிப்ளோமா மற்றும் ஏனைய கற்கை நெறிகளை ஒழுங்கு செய்தல் ;

(ம) கல்வி நடவடிக்கைகளைக் கொண்டுநடாத்துகின்ற ஏதேனும் உள்நாட்டு அல்லது வெளிநாட்டு தொழிநுட்ப அல்லது தொழிற்றுறைப் பயிற்சி நிறுவனத்தின் இணைநிறுவனமாக அல்லது அமைப்பின் முகவராகச் செயற்படுதல் ;

(ர) கூட்டுத்தாபனத்தின் குறிக்கோள்கள் யாவற்றையும் அல்லது எதனையும் எய்துவதற்கு அவசியமான வாறாக, உகந்தனவாக அல்லது இடை நேர்விளைவாக இருக்கக்கூடிய வேறேதேனும் காரியங்களையும் கருமங்களையும் செய்தல்.

கூட்டுத்தாபனத்தின் பொதுத் தத்துவங்கள்.

4. இச்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கும், எழுத்திலான வேறேதேனும் சட்டத்திற்கும் அமைய கூட்டுத்தாபனத்தின் குறிக்கோள்களை அல்லது அவற்றுள் ஏதேனுமொன்றை மேம்படுத்துவதற்கு அல்லது முன்னேற்றுவதற்கு அவசியமானவாறான அல்லது விரும்பத்தக்கவாறான எத்தகையவையுமான அத்தகைய எல்லாச் செயல்களையும், கருமங்களையும், காரியங்களையும் செய்வதற்கும் புரிவதற்கும் நிறைவேற்றுவதற்கும் கூட்டுத்தாபனம் தத்துவமுடையதாதல் வேண்டும். இத்தத்துவங்களுள் வங்கிக்கணக்குகளைத் தொடங்கவும், நடாத்தவும், முடிவுறுத்தவும், பிணைப்பொறுப்புடன் அல்லது பிணைப் பொறுப்பின்றி பணங்களைக் கடனெடுக்கவும் அல்லது திரட்டவும் மானியக்கொடைகளையும், நன்கொடைகளையும் பெறவும் அல்லது சேகரிக்கவும் அதன் நிதியங்களை முதலீடு செய்யவும் அத்துடன் கூட்டுத்தாபனத்தின் குறிக்கோள்களை நிறைவேற்றுவதற்குத் தேவையான அலுவலர்களையும், சேவையாளர்களையும் வேலையிலீடுபடுத்துதல், வேலைக்கமர்த்துதல், வேலைநீக்கம் செய்தல் ஆகியவற்றுக்குமான தத்துவங்களும் அடங்கும்.

கூட்டுத்தாபனத்தின் அலுவல்களை முகாமை செய்தல்.

**5.** (1) கூட்டுத்தாபனத்தின் அலுவல்கள், தலைவர், செயலாளர், உபசெயலாளர், பொருளாளர் மற்றும் கூட்டுத்தாபனத்தின் அப்போதைக்கு வலுவிலிருக்கும் விதிகளுக்கிணங்கத் தெரிவுசெய்யப்படக்கூடிய ஆறு பேருக்குக் குறையாத உறுப்பினர்களைக் கொண்ட முகாமைக்குழுவொன்றின் மூலம் இச்சட்டத்தின் ஏனைய ஏற்பாடுகளுக்கும் கூட்டுத்தாபனத்தின் அப்போதைக்கு வலுவிலிருக்கும் விதிகளுக்கிணங்கவும் நிருவகிக்கப்படுதல் வேண்டும்.

(2) இப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவில் உள்ளது எது எப்படியிருப்பினும், வணக்கத்துக்குரிய பன்வில உத்தராநந்த தேரர் சீவியகாலத்து கூட்டுத்தாபனத்தின் தலைவர் ஆதல் வேண்டுமென்பதுடன் அவருக்குப்பின் அடுத்துறும் தலைவரை அவர் பெயர் குறித்துரைத்தலும் வேண்டும். அவ்வாறு அடுத்துறும் தலைவரும் சீவியகாலத் தலைவராதல் வேண்டும்.

(3) கூட்டுத்தாபனத்தின் முதலாவது முகாமைக்குழு இச்சட்டம் நடைமுறைக்குவரும் தேதிக்கு நேர்முந்திய நாளன்று, ஸ்ரீ கங்காதிலக மகா விகாரஸ்த சாசனாரக்ஷக சமிதியவின் முகாமைக்குழுவில் உறுப்பினர்களாக பதவிதாங்கியோரைக் கொண்டிருத்தல் வேண்டும்.

கூட்டுத்தாபனத்தின் விதிகள்.

**6.** (1) காலத்திற்குக்காலம் ஏதேனும் பொதுக்கூட்டத்திலும் சமுகமாயிருந்து வாக்களிக்கும் உறுப்பினர்களில் மூன்றிலிரண்டுக்குக் குறையாத பெரும்பான்மைகொண்டும் பின்வரும் கருமங்கள் எல்லாவற்றுக்காகவும் அல்லது அவற்றுள் எதற்காகவும், இச்சட்டத்தினது அல்லது எழுத்திலான வேறு சட்டத்தினது ஏற்பாடுகளுடன் ஒவ்வாதனவாக இராத விதிகளை ஆக்குதல் கூட்டுத்தாபனத்திற்குச் சட்ட முறையானதாதல் வேண்டும் :—

(அ) உறுப்பாண்மையின் வகுதியும் உறுப்பினர்களைச் சேர்த்துக்கொள்ளுதலும் உறுப்பினர்கள் விலகுதலும் அல்லது அவர்களை விலக்குதலும் ;

(ஆ) பதவிதாங்குநர்களைத் தேர்ந்தெடுத்தல், பதவிதாங்குநர்கள் தமது பதவியிலிருந்து விலகுதல் அல்லது பதவியை வறிதாக்குதல் அல்லது பதவியிலிருந்து அகற்றப்படுதலும் அவர்களின் தத்துவங்களும், நடத்தையும், கடமைகளும் ;

(இ) முகாமைச்சபை உறுப்பினர்களைத் தேர்ந்தெடுத்தலும் அதன் தத்துவங்களும், முகாமைச்சபை உறுப்பினர்களின் ஒழுக்கமும் கடமைகளும் பதவிக்காலமும்;

(ஈ) கூட்டுத்தாபனத்தின் பல்வேறு அலுவலர்கள், முகவர்கள் அத்துடன் சேவையாளர் என்போரின் தத்துவங்களும் ஒழுக்கமும் கடமைகளும், பணிகளும் ;

(உ) முகாமைச்சபையின் கூட்டங்களைக் கூட்டுதலிலும், நடாத்துதலிலும் பின்பற்றப்படவேண்டிய நடவடிக்கைமுறையும், அத்தகைய கூட்டங்களின் நேரங்களும், இடங்களும் அறிவித்தல்களும், நிகழ்ச்சிநிரலும், அதற்கான கூட்ட நடப்பெண்ணும் அதில் கருமமாற்றுதலும் ;

(ஊ) கூட்டுத்தாபனத்தின் ஆதனத்தை நிருவகித்தலும், முகாமை செய்தலும், அதன் நிதிகளின் கட்டுக்காப்பும், அதன் கணக்குகளைப் பேணுதலும், கணக்காய்வு செய்தலும் ;

(எ) பொதுவாக, கூட்டுத்தாபனத்தின் அலுவல்களை முகாமை செய்தலும் அதன் குறிக்கோள்களை நிறைவேற்றுதலும்.

(2) கூட்டுத்தாபனத்தால் ஆக்கப்படும் விதி எதுவும் அதே போன்ற கூட்டத்திலும் (1) ஆம் உட்பிரிவின்கீழ் விதியொன்று ஆக்கப்படும் அதே முறையிலும் திருத்தப்படலாம், மாற்றப்படலாம், அதற்குச் சேர்க்கப்படலாம் அல்லது நீக்கப்படலாம்.

(3) கூட்டுத்தாபனத்தின் அங்கத்தவர்கள் கூட்டுத்தாபனத்தின் விதிகளுக்கு அமைந்தொழுகுதல் வேண்டும்.

கூட்டுத்தாபனத்தின் நிதியம்.

7. (1) கூட்டுத்தாபனம் அதன் சொந்த நிதியத்தைக் கொண்டிருத்தல் வேண்டுமென்பதுடன், கொடை, இறுதிவிருப்பாவணக் கையளிப்பு, கைமாற்றம், நன்கொடைகள், உதவுதொகைகள் அல்லது கட்டணங்களாகக் கிடைக்கக்கூடிய எல்லாப் பணங்களும் முகாமைக்குழு தீர்மானிக்கக்கூடியவாறான ஒரு வங்கியில் அல்லது ஒன்றுக்கு மேற்பட்ட வங்கிகளில், கூட்டுத்தாபனத்தின் பெயரில் வைப்பிலிடப்படுதல் வேண்டும்.

(2) கூட்டுத்தாபனத்தின் ஆதனங்களை மறுசீரமைப்பதற்கும், அபிவிருத்தி செய்வதற்கும் அல்லது சீராக்குவதற்குமான நோக்கத்துக்காக கூட்டுத்தாபனம், ஏதேனும் தேய்மான நிதியத்தை அல்லது கடனாழ் நிதியத்தை உருவாக்கலாம்.

(3) கூட்டுத்தாபனத்தின் தத்துவங்களையும், பணிகளையும் பிரயோகிப்பதிலும், நிறைவேற்றுவதிலும் கூட்டுத்தாபனத்தால் உறப்பட்ட எல்லாச் செலவினங்களும் நிதியத்திலிருந்து செலுத்தப்படுதல் வேண்டும்.

*சமிதியவினால் செலுத்தப்படற்பாலனவையும், சமிதியவுக்குச் செலுத்தப்படற்பாலனவையுமான தனிசுகள்.*

**8**. இச்சட்டம் தொடங்கும் தேதிக்கு நேர்முந்திய நாளன்று சமிதியவின் எல்லாத் தனிசுகளும், பொறுப்புகளும் இத்தால் தாபிக்கப்படும் கூட்டுத்தாபனத்தினால் செலுத்தப்பட வேண்டும் என்பதுடன், அந்நாளன்று சமிதியவிற்குக் கிடைக்கவேண்டிய எல்லாத் தனிசுகளும், ஒப்பப்பணங்கள், உதவுதொகைகள் என்பன யாவும் கூட்டுத்தாபனத்துக்குச் செலுத்தப்படலும் வேண்டும்.

*கூட்டுத்தாபனம் அசைவுள்ள அசைவற்ற ஆதனங்களை வைத்திருக்கலாம்.*

**9**. கூட்டுத்தாபனமானது ஏதேனும் கொள்வனவு, அளிப்பு, நன்கொடை, இறுதிவிருப்பாவணக்கையளிப்பின் பயனாக அல்லது வேறேதேனும் விதமாகக் கிடைக்கக்கூடிய ஏதாவது அசைவுள்ள, அசைவற்ற ஆதனத்தைக் கொள்ளவும், வைத்திருக்கவும், சட்டப்படி இயலுமானதும் முடிந்ததாதலும் வேண்டுமென்பதுடன் அத்தகைய எல்லா ஆதனங்களும் கூட்டுத்தாபனத்தால் இச்சட்டத்தின் நோக்கத்துக்காக வைத்திருக்கப்படுதலும் வேண்டும், அத்துடன் கூட்டுத்தாபனத்தின் அப்போதைக்கு வலுவிலுள்ள விதிகளுக்கமைய அந்த ஆதனங்களை விற்கவும், ஈடுவைக்கவும், குத்தகைக்குக் கொடுக்கவும், பரிமாறிக்கொள்ளவும் அல்லது வேறுவகையில் கையாளவும் முழுத்தத்துவமும் அதிகாரமும் கொண்டிருத்தல் வேண்டும்.

*கூட்டுத்தாபனத்தின் இலச்சினை எவ்வாறு பொறிக்கப்படல் வேண்டும் என்பது.*

**10**. கூட்டுத்தாபனத்தின் இலச்சினையானது கூட்டுத்தாபனத்தின் தலைவரதும், செயலாளரதும் அல்லது பொருளாளரதும் முன்னிலையில் அன்றி, (அவர்கள் தாம் சமுகமளித்தமைக்கு அடையாளமாக அச்சாதனத்தில் கையொப்பமிட வேண்டும்.) எச்சாதனத்திலும் பொறிக்கப்படலாகாது. அப்படிக் கையொப்பமிடுதல், சாட்சியாக எவரேனும் ஒருவர் கையொப்பமிடுவதற்குப் புறம்பானதாயிருத்தல் வேண்டும்.

கணக்காய்வும் கணக்குகளும்.

11. (அ) கூட்டுத்தாபனத்தின் நிதியாண்டு பஞ்சாங்க ஆண்டாகவிருத்தல் வேண்டும்.

(ஆ) கூட்டுத்தாபனமானது அதன் வருமானம் மற்றும் செலவினம், சொத்துக்களும், பொறுப்புக்களும் அத்துடன் கூட்டுத்தாபனத்தின் மற்றெல்லாக் கொடுக்கல் வாங்கல்கள் பற்றிய முறையான கணக்குகளை வைத்திருக்கச் செய்வித்தல் வேண்டும்.

(இ) கூட்டுத்தாபனத்தின் கணக்குகள் ஒரு தகைமைபெற்ற கணக்காய்வாளரினால் கணக்காய்வு செய்யப்படல் வேண்டும்.

இப்பிரிவில் "தகைமைபெற்ற கணக்காய்வாளர்" என்பது —

(i) இலங்கைப் பட்டயக்கணக்காளர் நிறுவகத்தின் உறுப்பினராகவுள்ள அல்லது சட்டத்தினால் தாபிக்கப்பட்ட வேறேதேனும் நிறுவகத்தின் உறுப்பினரொருவராகவும், அத்தகைய நிறுவகத்தின் பேரவையினால் கணக்காளர் ஒருவராகத் தொழில் புரிவதற்காக வழங்கப்பட்ட சான்றிதழொன்றைக் கொண்டவராகவுள்ள தனியாள் ஒருவர் ; அல்லது

(ii) கணக்காளர் குழுமமொன்றின் வதியும் பங்காளர் ஒவ்வொருவரும் இலங்கைப் பட்டயக் கணக்காளர் நிறுவகத்தின் உறுப்பினர் ஒருவராக அல்லது சட்டத்தினால் தாபிக்கப்பட்ட வேறேதேனும் நிறுவகத்தின் உறுப்பினரொருவராகவும், அத்தகைய நிறுவகத்தின் பேரவையினால் கணக்காளர் ஒருவராகத் தொழில் புரிவதற்காக வழங்கப்பட்ட சான்றிதழொன்றைக் கொண்டவராகவும் இருக்கின்றதான கணக்காளர் குழுமம் ஒன்று,

என்று பொருள்படும்.

குடியரசினதும் மறுபேரினதும் உரிமைகளைப் பேணல்.

12. இச்சட்டத்தில் அடங்கியுள்ளது எதுவும் குடியரசினது உரிமைகளையேனும், ஏதேனும் அரசியல் அல்லது கூட்டிணைக்கப்பட்ட குழுவினது உரிமைகளையேனும், இச்சட்டத்தில் குறிப்பிட்டவர்களும், அவர்கள் மூலம், அவர்களிலிருந்து அல்லது அவர்களின்கீழ் உரிமைகோருபவர்கள் தவிர்ந்த வேறு எவரேனும் ஆட்களினது உரிமைகளையேனும் பங்கப்படுத்துவதாகவோ பாதிப்பதாகவோ இருத்தலாகாது.

ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில், சிங்கள உரை மேலோங்கி நிற்றல்.

13. இச்சட்டத்தின் சிங்கள உரைக்கும் தமிழ் உரைக்குமிடையே ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில், சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும்.

பாராளுமன்றத்தின் சட்டமூலங்களினதும் சட்டங்களினதும் தமிழ்ப் பிரதிகளின் வருடாந்த சந்தா (உள்நாடு) ரூபா 1,387: (வெளிநாடு) ரூபா 1,849 ; ஒவ்வோராண்டும் திசெம்பர் மாதம் 15 ஆந் தேதிக்குமுன் எதிர்வரும் ஆண்டுக்கான சந்தாப்பணம் அத்தியட்சகர், அரசாங்க வெளியீட்டலுவலகம், இல.32, திரான்ஸ்வேர்க்ஸ் இல்லம், லோட்டஸ்ரோட், கொழும்பு 01 என்ற விலாசத்திற்கு அனுப்பப்பட வேண்டும்.